# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8075884

C

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம்: ஊ.த.க பிரிவு Year: ஆண்டு: 2021 FIR No.: மு.த.அ. எண்: 07/2021 Date: நாள்: 01.07.2021

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனை சட்டம் 1860 Sections பிரிவுகள்: 465, 468, 409, 471, 477(A),
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 Sections பிரிவுகள்: 120(b) IPC
   (iii) Act சட்டம்: (திருத்தப்பட்டது) 2018 Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(a) PC Act.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : 13.07.2017 Date to நாள் வரை : 25.08.2019
   Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 30.06.2021 Time நேரம் :
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : ஊராட்சி ஒன்றிய அலுவலகம், மரக்காணம், வடகிழக்கு சுமார் 70 கி.மீ.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : ர. ஜெகநாதன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் : இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் (g) Address : முகவரி : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, விழுப்புரம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   குற்றம் சாட்டப்பட்டவர்கள் வரிசை எண் 1 முதல் 9 வரை தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   அனுமதி உத்தரவு பெறப்பட்டது.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்), விழுப்புரம், முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அதிகாரியால் சேகரிக்கப்பட்ட நம்பகமான தகவலின் படி விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்சிவிறி கிராம ஊராட்சியில் கடந்த 13.02.2017 முதல் 25.08.2019 வரையிலான காலத்தில் ஊராட்சி நிதி கணக்கிலிருந்து மேற்படி ஊராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டிகளுக்கான OHT மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய் பழுது நீக்கம் & பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, கைப்பம்பு பழுது நீக்கம் & பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டதில் போலியான ரசீதுகள் மூலம் செலவீன சீட்டு தயார் செய்து அரசு பணம் கையாடல் செய்யப்பட்டுள்ள விபரம் பின்வருமாறு:

வரிசை எண்-7ல் கண்ட குற்ற அலுவலர்கள் 1 முதல் 9 வரை உள்ளவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு 2(C) ன் படி பொது ஊழியர்கள் ஆவர்.

(தொடர்ச்சி பக்கம்-4)

S. மாலா காவல் ஆய்வாளர்
ஊ.த.க பிரிவு, கடலூர்

ர. ஜெயதாஸ்
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க பிரிவு,
விழுப்புரம்.

01.07.2021

(விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண்.07/2021, பக்கம்-3)

வரிசை எண்.7 -ன் விபரம் (குற்றம் சாட்டப்பட்டவர்களின் பெயர்கள்)

A-1). **திரு.ஜி.ஞானவேல்**, முன்னாள் தனி அலுவலர்/ BDO(VP), மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-2). **திரு.S.தர்மலிங்கம் (Rtd)**, முன்னாள் தனி அலுவலர்/ BDO(VP), மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-3). **திரு.S.தேவராஜ்**, முன்னாள் தனி அலுவலர்/ BDO(VP), மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A -4). **திரு.ப.சுரேஷ்குமார்**, முன்னாள் தனி அலுவலர்/ BDO(VP), மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-5) **திரு.K.கணேசமூர்த்தி (Rtd.)**, முன்னாள் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-6). **திரு.எ.ஏகாம்பரம்**, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-7). **திரு.சி.புகழேந்தி**, முன்னாள் ஊராட்சி செயலர், கீழ்சிவிறி பஞ்சாயத்து, மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-8). **திரு.ரா.ராஜேஷ்**, முன்னாள் ஊராட்சி செயலர், கீழ்சிவிறி பஞ்சாயத்து, மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

A-9). **திரு.கே.மண்ணாங்கட்டி**, முன்னாள் ஊராட்சி செயலர், கீழ்சிவிறி பஞ்சாயத்து, மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

(பக்கம்-2ன் தொடர்ச்சி) வரிசை எண்-7ல் கண்ட குற்ற அலுவலர்கள் 1 முதல் 9 வரையிலானவர்கள் கடந்த 13.02.2017 முதல் 25.08.2019 வரையிலான காலத்தில் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்தபோது மேற்படி ஒன்றியத்திற்குட்பட்ட கீழ்சிவிறி கிராம ஊராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டிகளுக்கான OHT மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, கைப்பம்பு பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டதாக மேற்படி ஊராட்சியில் செயலராக பணிபுரிந்த சந்தேக அலுவலர்களான A-7, A-8, A-9 ஆகியோரால் தயாரிக்கப்பட்ட செலவீன சீட்டுகளை A-1 முதல் A-6 வரை உள்ள சந்தேக அலுவலர்கள் அனுமதித்து அதற்குண்டான தொகை விடுவித்துள்ளனர். மேற்படி தொகை விடுவித்த செலவீன சீட்டுகளின் உண்மை தன்மை தொடர்பாக ரகசிய விசாரணை செய்து அதற்குண்டான ஆவணங்களை பார்வையிட்டதில் மேற்படி செலவீன சீட்டுகளில் இணைக்கப்பட்ட ரசீதுகள் போலியானவையாகவும், வெவ்வேறு கடைகளின் பெயரில், போலியாக தயாரிக்கப்பட்ட ரசீதுகளில் வாங்கபப்பட்ட பொருட்களின் விபரத்தினையும் விலையையும் ஒரே நபரின் கையெழுத்தால் எழுதப்பட்டும், பல ரசீதுகளில் கடை உரிமையாளரின் கையொப்பம் இல்லாமலும், ஒரே வேலைக்காக பல ரசீதுகள் கொடுக்கப்பட்டும், சில ரசீதுகள் கம்பூட்டர்ரில் டைப் செய்து பிரிண்ட் எடுக்கப்பட்டு பொருட்கள் வாங்கியதை குறிப்பிடப்படாமல் வெத்து ரசீதாக இணைக்கப்பட்டும் உள்ளது. மேற்படி போலியாக தயாரிக்கப்பட்டுள்ள ரசீதுகள் மூலம் செலவீன சீட்டு தயார் செய்து மேற்கண்ட 1 முதல் 9 வரையிலான சந்தேக அலுவலர்கள் தங்களது பணிக்காலத்தில் சுயலாபம் பெறும் நோக்கோடு செயல்பட்டு ரூபாய்.8,02,646/- அளவிற்கு கீழ்கண்ட விபரப்படி அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

I. கீழ் சிவிறி ஊராட்சியில் 2017-18, 2018-19 ஆம் ஆண்டுகளில் தெருவிளக்கு பராமரிப்பு சம்மந்தமான செலவினங்களில் உள்ள போலி ஆவணங்களின் மூலம் ரூபாய்.2,15,452/-ம்,

II. கீழ் சிவிறி ஊராட்சியில் 2017-18 மற்றும் 2018-19 ஆம் ஆண்டுகளில் OHT மேல்நிலை நீர் தேக்கத்தொட்டி மின்மோட்டார் பராமரிப்பு சம்மந்தமான செலவினங்களில் உள்ள போலி ஆவணங்களின் மூலம் ரூபாய்.2,82,537/-ம்,

III. கீழ் சிவிறி ஊராட்சியில் 2017-18, 2018-19 ஆம் ஆண்டுகளில் தெருவிளக்கு மற்றும் குடிநீர் குழாய் பராமரிப்பு சம்மந்தமான செலவினங்களில் உள்ள போலி ஆவணங்களின் மூலம் ரூபாய்.1,35,862/-ம்,

IV. கீழ் சிவிறி ஊராட்சியில் 2017-18, 2018-19 ஆம் ஆண்டுகளில் கைப்பம்பு பராமரிப்பு சம்மந்தமான செலவினங்களில் உள்ள போலி ஆவணங்களின் மூலம் ரூபாய்.44,695/-ம்,

V. கீழ் சிவிறி ஊராட்சியில் 2017-18, 2018-19 ஆம் ஆண்டுகளில் நிர்வாக செலவீனம் மற்றும் பொது சுகாதரம் சம்மந்தமான செலவினங்களில் உள்ள போலி ஆவணங்களின் மூலம் ரூபாய்.1,24,100/-மும்

மேற்படி மரக்காணம் ஊராட்சி ஒன்றியம், கீழ்சிவிறி கிராம ஊராட்சியில் கடந்த 13.02.2017 முதல் 25.08.2019 வரையிலான காலத்தில் பணிபுரிந்த சந்தேக அலுவலர்களான 1 முதல் 9 வரையிலானவர்கள் தங்களது பணிக்காலத்தில் கீழ்சிவிறி கிராம ஊராட்சி நிதி கணக்கிலிருந்து மேற்படி ஊராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டிகளுக்கான OHT மின்மோட்டார் பழுது நீக்கம், குடிநீர் குழாய் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு கைப்பம்பு பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு மற்றும் நிர்வாக செலவீனங்கள் மேற்கொள்ளப்பட்டதாக போலியான ரசீதுகள் மூலம் செலவீன சீட்டு தயார் செய்து குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்யும் நோக்கத்தோடு, பொய்யான ஆவணம் (வவுச்சர்கள்) தயார் செய்து, பொய் கணக்கு எழுதி, அரசை ஏமாற்றும் பொருட்டு, ஆதாயம் பெறும் நோக்கோடு அரசு பணம் ரூபாய்.8,02,646/- அளவிற்கு விடுவித்து உள்ளனர். மேற்படி தொகை விடுவித்த வகையில் மொத்தம் ரூபாய் 8,02,646/- அளவிற்கு அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

குற்ற அலுவலர்கள் 1 முதல் 9 வரையிலானவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய பிரிவு 17(A) Prevention of Corruption Act- 1988 as Amended P.C (Amendment) Act 2018 ன் படி மேற்படி குற்ற அலுவலர்களின் நியமன அலுவலரான (Appointing Authority) அரசு கூடுதல் தலைமை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, சென்னை அவர்களிடம் பதிவுறு வழக்கு பதிய அனுமதி பெறப்பட்டது.

ஆகையால், மேற்சொன்ன குற்ற அலுவலர்கள் 1 முதல் 9 வரையிலானவர்கள் மீது சட்ட பிரிவுகள் 465, 468, 409, 471, 477(A), 120(b) இந்திய தண்டனை சட்டம் 1860, 13(2) உடன் இணைந்த 13(1)(a) ஊழல் தடுப்பு சட்டம் (திருத்தப்பட்டது) 2018 ன் படி இன்று 01.07.2021ம் தேதி 11.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு வழக்குகள்) விழுப்புரம் அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் நகல் காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மற்றொரு நகல் வழக்கின்கோப்பில் வைக்கப்பட்டது.

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்